DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 200/2024
Prosecution Witness - P.W. 2

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ஷைனி |
| Father's Name | : | க/பெ. ரெஞ்சித் |
| Village | : | மங்கலம் |
| Taluk | : | திருவட்டார் |
| Calling | : | House Wife |
| Age | : | 24 |
| Date | : | 03.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2025.

(எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

03.09.2025

**முதல் விசாரணை**:-

அ.சா. 1 ராஜேஸ்வரி எனது அம்மா. இந்த வழக்கு சம்பவத்தில் இறந்தவர் எனது அப்பா முத்துபிள்ளை. எனது அப்பாவிற்கு மரம் வெட்டும் தொழில். எதிரி அனீஷை எனக்கு தெரியும். அவருக்கும் மரம் வெட்டும் தொழில்தான். எனது கணவர் பெயர் ரஞ்சித். எனக்கு 07.09.2022 ல் திருமணம் நடந்தது. எனது கணவர் வீடு மலைஇடிஞ்சான்விளை பெருஞ்சாணியில் உள்ளது. எனக்கு குழந்தை பிறப்பதற்கு

மருத்துவம் பார்த்து பிப்ரவரி 2023 ல் ஆப்ரேசன் செய்யப்பட்டிருந்தது. அதனால் ஓய்வு எடுப்பதற்காக எனது அம்மா வீட்டிற்கு வந்திருந்தேன். நான் ஜனவரி 2023 லியே எனது அம்மா வீட்டிற்கு வந்துவிட்டேன். எனக்கு 23.02.2023 அன்று ஆப்ரேசன் நடந்தது. எவ்வளவு நாள் அவ்வாறு எனது அம்மா வீட்டில் இருந்தேன் என்றால் சாட்சி முதலில் 9 மாதங்கள் இருந்தேன் என கூறிவிட்டு பிறகு 10 மாதங்கள் இருந்ததாக கூறுகிறார். எந்த தேதி வரையில் எனது அம்மா வீட்டில் இருந்தேன் என கேட்டதற்கு வழக்கு சம்பவம் நடந்த தேதி வரையில் எனது அம்மா வீட்டில் இருந்தேன் என கூறுகிறார். எனது அம்மா வீட்டிலிருந்து புளிமூடு ஜங்சனிலிருந்த சம்பவம் நடந்த பஸ் ஸ்டாப் எவ்வளவு தொலைவு, எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கு திசையில் 100 அடி தொலைவு உள்ளது. 01.01.2024 அன்று காலை 11 மணியளவில் எனது அப்பா அந்த பஸ் ஸ்டாப்பில் குலசேகரம் போவதற்காக நின்று கொண்டிருந்தார். எனது அப்பா பஸ் ஏறுகிறாரா என பார்ப்பதற்கு எனது வீட்டிற்கு முன்புறம் உள்ள ரோட்டில் நின்று கொண்டிருந்தேன். அப்போது எதிரி அனிஷ் சானல்கரையிலிருந்து மூன்று அடி பாதை வழியாக அந்த பஸ் ஸ்டாப்பிற்கு வந்தான். அந்த மூன்று அடி பாதை எங்கு வந்து சேருகிறது என்றால் அந்த பஸ் ஸ்டாப்பில் வந்து சேருகிறது. அப்போது என் அப்பாவிடம் குடிப்பதற்கு பைசா கேட்டார். எனது அப்பா எதற்கு அடிக்கடி என்னிடம் குடிப்பதற்கு பைசா கேட்கிறாய் என்னிடம் பைசா இல்லை என சத்தம் போட்டு பேசினார். அந்த சத்தத்தை கேட்டு நான் எனது அப்பா அருகே போய்விட்டேன். எனது அப்பா அவனிடம் வேலை செய்து குடி என சொன்னார். அனிஷ் நீ என்ன என்னை வேலை செய்து குடி என சொல்கிறாய் என

கெட்டவார்த்தை போட்டு பேசினான். என்ன கெட்டவார்த்தை சொன்னான் என்றால் என்னால் சொல்ல முடியாது எழுதி காட்டுகிறேன் என சாட்சி கூறி, ஒரு தாளில் தேவிடியா பிண்டாமோனே என எழுதி காட்டினார். கிழே கிடந்த ஒரு சாவியை எடுத்து எனது அப்பாவின் வலது கண் புருவத்தில் குத்தி இழுத்தான். வலது கால் தொடையிலும் குத்தி இழுத்தான். அதன்பிறகு காலால் எனது அப்பாவின் நெஞ்சை சவுட்டி தள்ளி பயணிகள் நிற்ககூடிய பஸ் ஸடாப்பிற்கு கீழே உள்ள பிளாட்பாமில் தள்ளினான். எனது அப்பா கீழே விழுந்துவிட்டார். எனது அப்பாவின் தலையை பிடித்து அங்கிருந்த சிமெண்ட் திண்டில் நெற்றி பகுதியில் முட்டினான். பிறகு எனது அப்பாவின் தலையை நான்கு பக்கமும் மாறி மாறி அந்த திண்டில் மோதினான். எனது அப்பா மயங்கி விழுந்துவிட்டார். செல்வமணியின் மகன் ரமேஷ், தங்கப்பனின் மகன் ரமேஷ், புஷ்பராஜ் ஆகியோரும் சம்பவத்தை பார்த்தார்கள். நான் சத்தம் போட்டேன். என் அம்மா ஓடிவந்தார். என் அம்மா என்ன நடந்தது என கேட்டார். நான் நடந்ததை சொன்னேன். அனிஷ் சாவியை எடுத்துக் கொண்டு மங்கலம் என்ற ஊரை பார்த்து ஓடிவிட்டான். எனது அப்பாவின் டிசர்ட்டிலும், லுங்கியிலும் இரத்தக்கறை படிந்திருந்தது. பஸ் ஸ்டாப்பில் பயணிகள் நிற்கக்கூடிய இடத்திலோ, அந்த திண்டிலோ இரத்தம் இருந்ததா என்றால் இல்லை. சாவியை பிடிக்கும் அளவு இருந்தது. ஒரு புறம் வளையமாக இருந்தது. குத்திய பகுதி சாவியின் முன் பகுதி. சாவியில் சாவியை தவிர வேறு எதுவும் இருந்ததா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் சாவியால்தான் எதிரி அப்பாவை குத்தினார். **அது சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அங்கிருந்து அப்பாவை அந்த பக்கம் வந்த ஒரு

ஆட்டோவில் குலசேகரம் காவல்ஸ்தலத்தில் உள்ள டேவிட் மருத்துவமனைக்கு கூட்டி சென்றார். யார் யார் உடன் சென்றது என்றால் அம்மா மட்டும்தான் சென்றார். நான் ஆப்ரேசன் செய்திருந்ததால் போகவில்லை. அங்கிருந்து ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அப்பாவை கூட்டிச் சென்றுள்ளார்கள். மறுநாள் காலை 7 மணியளவில் எங்களது வீட்டில் வந்து உதவி ஆய்வாளர் விசாரித்தார். எனது அப்பா 13 ஆம் தேதி காலை 4 மணியளவில் ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டார். அந்த 13 நாட்களில் நான் அடிக்கடி அப்பாவை பார்த்து வந்தேன், அவர் பேசும் நிலையில் இல்லை. கண்ணே முழிக்கவில்லை. இறந்த செய்தியை கேட்டு நான் மருத்துவமனை சென்றிருந்தேன். அங்கே மார்ச்சொரி அருகே வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>**

என்னை இந்த வழக்கு சம்பந்தமாக எத்தனை முறை குலசேகரம் போலீசார் விசாரித்தார்கள் என்றால் இரண்டு முறை விசாரித்தார்கள். 2 ஆம் தேதி என்னை எங்கு வைத்து விசாரித்தார் என்றால் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். என்னை இரண்டு முறை விசாரித்தபோதும் எனக்கு ஆப்ரேசன் நடந்ததால் என் அம்மா வீட்டில் ஓய்வில் இருந்தேன் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. என்னை போலீசார் விசாரிக்கும்போது மலைஇடிஞ்சான்விளையில் எங்கள் குடும்பத்துடன் வசித்து வருகிறேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். இரண்டு முறை விசாரித்தபோதும் நான் எனது வீட்டு வேலைகளை கவனித்து வருகிறேன் என சொன்னேனா என்றால் இல்லை. மருத்துவ அறுவை சிகிச்சை

செய்து வீட்டில் ஓய்விலிருந்தேன் என நான் சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்கள் உள்ளது. நான் வீட்டில் ஓய்வு எடுக்கும்போது பல முறை எனது அப்பா வேறு ஊர்களுக்கு போவதற்காக பஸ் ஸ்டாப்பிற்கு போகும்போது சொல்லிவிட்டு போய் உள்ளார் என்றால் சரிதான். என்னை இரண்டு முறை போலீசார் விசாரிக்கும்போதும் எனது அப்பா பஸ் ஏறி விட்டரா என பார்ப்பதற்காக ரோட்டில் வந்து நின்றேன் என்று நான் தற்போது சொன்ன விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். என்னை முதல் முதலாக எங்கு வைத்து, எத்தனை மணிக்கு, எந்த தேதியில் போலீசார் விசாரித்தார்கள் என்றால் 2 ஆம் தேதி காலை 7 மணிக்கு, வீட்டில் வைத்து விசாரித்தார்கள். அப்படி விசாரிக்கும்போது கீழே கிடந்த சாவியை எடுத்து குத்தினார் என சொன்னோ என்றால் சொன்னேன். அனிஷ் தனது கையில் இருந்த இரும்பு சாவியால் எனது அப்பாவின் புருவத்தில் குத்தினான் என நான் சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை. பஸ் ஸ்டாப்பில் உள்ள சிமெண்ட் திண்டிலோ, தரையிலோ எதிரி எனது அப்பாவின் தலையின் நான்கு புறத்திலும் மோதினான் என்ற விவரத்தை போலீசார் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். எனது அப்பாவின் தலையை பஸ்ஸ்டாப்பின்தரையில் எத்தனை முறை மோதினான், அங்கிருந்த திண்டில் எத்தனை முறை மோதினான் என்றால் தரையில் மோதவில்லை, அந்த திண்டில் மோதவில்லை, மாறி மாறி மோதினான். நிறைய தடவை மோதினான். தலையில் எந்த புறத்தில் மோதினான் என்றால் அப்பாவின் தலையை மோதியபோது அவர் எழும்ப முயற்சித்தார். அப்போது

அப்பாவின் தலையைம நாலாபுறத்திலும் மோதினான். எனது அப்பாவின் தலையை மாறி மாறி மோதியது அந்த சிமெண்ட் திண்டில் மட்டும்தானா என்றால் ஆமாம். பஸ் ஸ்டாப்பிற்கு முன்புறம் இரண்டு தூணும், பின்புறம் ஒரு சுவரும் இதற்கு நடுவே உட்காருவதற்கு திண்டும் உள்ளது என்றால் சரிதான். பின்புற சுவரில் கொண்டு போய் எனது அப்பாவின் தலையை மாறி மாறி இடிக்கவில்லையா என்றால் இடிக்கவில்லை. என்னை போலீசார் விசாரிக்கும்போது எனது அப்பாவின் தலையை பிடித்து இழுத்து பேருந்து நிறுத்தத்தில் உள்ள சுவறில் மாறி மாறி முட்டினான் என்று சொன்னேனா என்றால் இல்லை. எனது அக்கா ஜினி அப்போது எங்கு இருந்தார் என்றால் அவருடைய கணவர் வீட்டில் இருந்தார். எனது அப்பாவின் நெஞ்சில் அனிஷ் காலால் சவுட்டி தள்ளினார் என நான் தற்போது சொன்ன விவரத்தை போலீசார் என்னை இரண்டு முறை விசாரித்தபோதும் சொன்னோ என்றால் சொன்னேன். எனது அப்பாவை எதிரி நெஞ்சில் காலால் சவுட்டி மிதித்ததை தவிர வேறு எதுவும் செய்யவில்லை என்றால் தலையை பிடித்து மோதினார். எனது அப்பாவை நான் பார்க்கும்வரையில் அனிஷ் கையால் கீழே தள்ளிவிடவில்லை என்றால் சரிதான். என்னை இரண்டு முறை போலீசார் விசாரிக்கும்போதும் அனிஷ் கையால் அப்பாவை பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்று சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை. எனது அப்பாவை சிமெண்ட் திண்டில் முட்டியதாக நான் சொல்லிய விவரத்தை போலீசார் என்னை இரண்டு முறை விசாரிக்கும்போதும் சொல்லவில்லையா என்றால் சொன்னேன். எனது அப்பாவின் லுங்கியில் பட்டிருந்ததாக சொல்லும் இரத்தம் எந்த இடத்திலிருந்து வந்த இரத்தம் என்றால்

எனது அப்பாவின் கண் புருவத்திலிருந்து வந்த இரத்தம். கண் புருவத்திலிருந்து வடிந்திருந்த இரத்தம் எனது அப்பாவின் டிசர்ட்டிலும், லுங்கியிலும் பட்டிருந்த விவரத்தை போலீசார் என்னை இரண்டு முறை விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். எனது அப்பாவை ஆட்டோவில் மருத்துவமனைக்கு எடுத்து செல்லும்போது அவருடைய தலையை எனது அம்மாவின் மடியில் வைத்துதான் கொண்டு சென்றார்கள் என்றால் சரிதான். அப்போது எனது அம்மா அணிந்திருந்த சேலையில் இரத்தம் வடிந்திருந்ததா என்றால் இல்லை. எனது அப்பாவின் நெற்றியிருந்து அவரை ஆட்டோவில் தூக்கி வைக்கும் வரையில் வடிந்து கொண்டுதான் இருந்ததா என்றால் ஆமாம். எனது அப்பாவின் நெற்றியிலிருந்து வடிந்த இரத்தம் எனது அப்பாவின் தலையை மோதிய சிமெண்ட் திண்டிலோ அல்லது தரை தளத்திலோ பட்டதா என்றால் இல்லை. எனது அப்பா ஒரு கொலை வழக்கில் சிக்கி கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் எனது அப்பாவிற்கு 7 வருடம் கடுங்காவல் தண்டனை கொடுத்து அதில் அவர் சிறை சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நானும், சம்பவத்தை பார்த்ததாக சொல்லும் மற்ற நபர்களும், எனது அப்பாவின் தலையை அனிஷ் தரையில் முட்டுவதை தடுக்க முயற்சிக்கவில்லையா என்றால் இல்லை. நான் பி.ஏ. படித்துள்ளேன். எனக்கு இரும்பும் தெரியும், Stainless Steel யும் தெரியுமா என்றால் தெரியும். அன்றைய தினம் எனது அப்பாவை தாக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட சாவி, இரும்பு சாவியா, Stainless Steel சாவியா என்றால் இரும்பு சாவி. பொதுவாக சாவியின் திறக்கும்பக்கம் பல் அமைப்பில் இருக்கும் என்றாலும் தலைப்பகுதி

வட்டமாக ஒரு துளையுடன் இருக்கும் என்றாலும் சரிதான். அனிஷ் கீழே கிடந்து எடுத்ததாக நான் சொல்லும் சாவியின் தலைப் பகுதி அதேபோல வட்டமாக ஒரு துளையுடன் இருந்ததா என்றால் ஆமாம். அப்படி இருந்த சாவியைதான் அனிஷ் கீழே இருந்து எடுத்து குத்தினானா என்றால் ஆமாம். அந்த சாவியுடன் வேறு எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் தற்போது காட்டப்பட்ட சா.பொ. 1 சாவியுடன் இணைக்கப்பட்டுள்ள மற்றொரு வளையம் சம்பவத்தினத்தன்று நான் பார்த்ததாக சொல்லும் சாவியில் கிடையாது என்றால் நான் அதை கவனிக்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 சாவியில் வளையம் ஒன்று இணைக்கப்பட்டிருப்பதால் சம்பவத்தின்தன்று கவனிக்கவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் சாவியின் முன் பகுதியில் உள்ள பல் போன்ற அமைப்பினால் குத்தினாரா அல்லது முனையினால் குத்தினாரா என்றால் முன்பகுதி முழுவதுமாக வைத்து குத்தினார். அவ்வாறு குத்தியதால் எனது அப்பாவின் உடலில் குத்தியப் பகுதியில் சிதைந்த காயம் ஏற்பட்டதா என்றால் ஆமாம். குத்தியபகுதி எனது அப்பாவின் புருவத்திற்கு மேல் உள்ள பகுதியில் தோலை கிழித்து எடுத்து விட்டதா என்றால் ஆமாம். அப்படி கிழித்து எடுத்த பகுதியிலிருந்து வந்த இரத்தம் அந்த சாவியின் குத்திய பகுதியில் பட்டதா என்றால் ஆமாம். சா.பொ. 1 சாவி இந்த வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா மயங்கிய நிலையில் எடுத்து சென்ற போதும் கூட நான் மருத்துவமனைக்கு செல்லவில்லையா

என்றால் எனக்கு ஆப்ரேசன் செய்யப்பட்டிருந்ததால் செல்லவில்லை. நான் 02.01.2024 அன்றும், 13.01.2024 அன்றும் இரண்டு வாக்குமூலங்கள் போலீசாருக்கு கொடுத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் பஸ் ஸ்டாப்பிலிருந்து 7 கிலோமீட்டர் தொலைவில் பெருஞ்சாணி அணை செல்லும் வழியில் பொன்மனைக்கு கிழக்கே என் கணவரின் வீடு உள்ள மலைஇடிஞ்சான்விளை உள்ளது என்றால் சரியல்ல, பஸ் ஸ்டாப்பிலிருந்து 1 ½ கிலோமீட்டர் தொலைவு உள்ளது. எனது அப்பா எனது அம்மா மூன்றாவது மனைவி என்றால் சரியல்ல, முதல் மனைவி. எனது அப்பா முதலில் டெய்சி என்பவரையும், அதன்பிறகு ராதா என்பவரையும் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. செல்வன் என்ற ஒரு நபரை எனது அப்பாவும், விஜயகுமார் என்பவரும் கொலை செய்துவிட்டதாக இந்த வழக்கின் எதிரி அனிஷின் அப்பா கணேசன் ஒரு புகார் கொடுத்தார் என்றாலும் அதனால் பழிவாங்கும் நோக்கத்தில் இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக புகார் கொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல. என்னை போலீசார் விசாரிக்கும்போது எனது அப்பாவின் டிசர்ட்டிலும், லுங்கியிலும் இரத்தம்பட்ட விவரத்தை நான் சொன்னேனா என்றால் இல்லை. உண்மைக்கு புறம்பாக ஜோடிக்கப்பட்ட வழக்கில் பழிவாங்கும் நோக்கில் எதிரிக்கு எதிராக பொய் என்று தெரிந்தும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவை சம்பவ இடத்திலிருந்து ஆட்டோவில் தூக்கி வைப்பதற்கு உதவி புரிந்தேனா என்றால்

இல்லை. அவ்வாறு ஆட்டோவில் தூக்கு வைக்கும்போது நான் எவ்வளவு தொலைவில் இருந்தேன் என்றால் பக்கத்தில்தான் இருந்தேன்.